# In the Court of the  District Munsif, Eraniel

**Original Suit No. 44/2016** **Date:21.04.2026.**

**(DW1)- நீலகண்டபிரசாத்**

வாதி தரப்பு குறுக்கு  விசாரணை

1. எனது நிரூபண வாக்குமூலத்தில் 1950 ஆம் வருடம் பாகஉடன்படிக்கை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பாகம் மரியதங்கம் என்ற தொம்மந்தோனி நாடாச்சி முதல் கட்சியாகவும் அவரது வாரிசுகள் இரண்டு முதல் 6 கட்சிகளாக ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாகப்படி அ பட்டிகை சொத்து முதல் கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் குறிப்பிடுவது போல் மரிய கண்ணு என்ற மகன் மேற்படி மரியதங்கத்திற்கு கிடையாது என்றாலும் மரியகாணிக்கம் என்ற பெயரில் தான் மகன் உண்டு என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 ஆவணம் எனக்கு யாரால் எழுதிக்கொடுக்கப்பட்டடு என்றால் மரியகண்ணு என்பவரால் எழுதிக்கொடுக்கப்பட்டது.

2. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ. 1 ஆவணப்படி மரியகாணிக்கம் என்பவர் தான் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 1950 பாகத்தில் விடுப்பட்ட சொத்துக்களை வாய்மொழியாக பிரித்து கொண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் எந்தெந்த சொத்துக்கள் யார் யாருக்கு எவ்வளவு சொத்துக்களாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. நான் குறிப்பிடுவது போல் எந்தவித வாய்மொழி பாகமும் நடைபெறவில்லை என்றாலும் அதனால் தான் என்னால் அது குறித்து சாட்சியம் அளிக்க முடியவில்லை என்றாலும் சரியல்ல. எனக்கு கிரயம் கொடுத்த மரியகண்ணு பெயரில் உள்ள பட்டா அல்லது தீர்வையை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை கிரய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன்.

3. தாவா சொத்திற்கு நான் கிரயம் பெற்றதில் இருந்து வழக்கு தாக்கல் செய்யும் காலம் வரை உள்ள பட்டா அல்லது தீர்வை ரசீது தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அது போல் எந்த தீர்வை ரசீதும் நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் 2016 வருடம் கிராம நிர்வாக அலுவலரை சுவாதீணப்படுத்தி அடங்கள் மற்றும் அ பதிவேட்டில் எனது பெயரை சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 2015 வருடத்திற்கு முன்பு நில ஆர்ஜிதம் செய்தது குறித்து அதிகாரிகளுக்கு ஆட்சேபணை அனுப்பி உள்ளனோ என்றால் அனுப்பி உள்ளேன். மேற்படி ஆட்சேபணை மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

4. கூடுதல் இழப்பீடு கேட்டு மனு தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் மேற்படி மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கின் வாதிகள் தான் நில ஆர்ஜிதத்திற்கு எதிராக ஆட்சேபணை மனு கொடுத்துள்ளார்கள் என்றாலும் நான் கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் பழைய சர்வே எண் 3472 என்று வா.சா.ஆ.2 ஆவணத்தில் துலங்குகிறது என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி உண்மையை மறைத்து பொய்யாக பழைய சர்வே எண் 3475 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல, 3472 தான் பழைய சர்வே எண் ஆகும்.

5. வாதி தாவா சொத்து சர்வே எண்ணிற்கான புல ஒப்புமை சான்றை வா.சா.ஆ. 4 ஆவணமாக தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அரசால் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் வாதியின் தகப்பனார் தனிசுலாஸ் என்பவரிடம் இருந்து வாரிசு உரிமைப்படி வாதிகளுக்கு கிடைத்த சொத்து என்றால் சரியல்ல, நான் கிரயம் பெற்ற சொத்தாகும். தாவா சொத்து ஆர்ஜிதம் செய்யப்படும் வரை வாதிகளின் அனுபவத்தில் தான் இருந்தது என்றாலும் தாவா சொத்தில் எனக்கு எந்தவித உரிமையும் அனுபவமும் கிடையாது என்றால் சரியல்ல. ஆர்ஜிதம் செய்யப்பட்ட சொத்துக்களை தவிர அதை ஒட்டி வேறு சொத்துக்கள் எனக்கு உள்ளதா என்றால் இல்லை.

6. நான் கிரயம் பெறும் சமயத்தில் தாவா சொத்தின் வில்லங்கம் பார்த்து வாங்கினேனா என்றால் வில்லங்கம் பார்த்துதான் வாங்கினேன். தாவா சொத்து எனக்கு கிரயம் கொடுத்த நபரின் பெயரில் உள்ள ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி தெரியாது. ஆர்ஜிதம் செய்யப்பட்ட இடத்தில் தென்னந்தோப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான், பிச்சி பூ செடி உள்ளது. தொம்மந்தோனி நாடாச்சிக்கு தாவா சொத்து எவ்வாறு கிடைத்தது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என்றாலும் நில ஆர்ஜிதத்திற்கான இழப்பீடு பெறுவதற்கு வாதிகளே தகுதி உடையவர்கள் என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்கு தொடர்பில்லா ஆவணங்கள் என்றாலும் சரியல்ல.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**